GOVERNMENT OF TAMILNADU

# DEPARTMENT OF HANDLOOMS AND TEXTILES

Applications are invited from the candidates belonging to the State of Tamil Nadu for admission into the First Year of 3 year Diploma Course in Handloom and Textile Technology in Indian Institute of Handloom Technology, Salem.

1. **Eligibility Criteria:**

   (i) **Educational Qualification:** The candidate should have passed 10th Standard or equivalent examination with English as a subject of study.

   Note: In the states wherever grade system is followed in 10th standard the candidates are required to submit the actual marks if available.

   (ii) **Age limit:** The age for admission of a candidate should be between 15 to 23 years for general categories and it should be between 15 to 25 years for SC/ST candidates as on 1st July 2021.

   (iii) **Reservation:** The Reservation Policy of the State of Tamilnadu will be followed. In addition to the above, minimum 20% of the total seats allotted to the State is reserved for candidates belonging to Weavers Community. Shortfall if any will be met out from the candidates other than Weaver's Community.

   (iv) **Number of seats:** The Government of India have allotted 30 seats to Indian Institute of Handloom Technology, Salem. This apart, selection for 4 seats to SPKM Indian Institute of Handloom Technology, Venkatagiri, Andhra Pradesh; 8 seats to Karnataka Handloom Technology Institute, Gadag, Karnataka; and 5 seats to Indian Institute of Handloom Technology, Kannur, Kerala would be made from Tamilnadu Merit List.

2. **Stipend:**

Each candidate admitted into the course shall be eligible for stipend of Rs.1000/- per month for 1st year, Rs.1100/- per month for in 3rd and 4th semester (2nd year) and Rs.1200/- per month for 5th and 6th (3rd year) of which 50% Central share of stipend shall be paid by Indian Institute of Handloom Technology and remaining 50% i.e. Rs.500/-, Rs.550/- and Rs.600/- per month per student shall be sanctioned by the respective state Government which shall be paid to the students as soon as the same is received from the State Government concerned for the duration of the course (tenable for 10 months from 16th July to 15th May).

**3. Form of Application:**

Application forms can be had from the Office of the Commissioner of Handlooms and Textiles, Kuralagam, II Floor, Chennai 600108 in person on all working days at free of cost or by post by enclosing a self addressed stamped envelope for Rs.5/-on or before 27.07.2021. Requisitions received without stamped envelope for sending the application by post will not be entertained.

Application form may also be downloaded from the website **www.iihtsalem.edu.in.**

The last date for the receipt of the filled in applications is **27.07.2021 up to 5.45 p.m.** to the above address.

**Principal Secretary / Commissioner**

DIPR/502/Display/2021

Scanned by CamScanner

தமிழ்நாடு அரசு

# கைத்தறி மற்றும் துணிநூல் துறை

சேலத்திலுள்ள இந்திய கைத்தறி தொழில் நுட்ப பயிலகத்தில் 2021–ஆம் ஆண்டு தொடங்கவிருக்கும் முதல் பருவம், 3 ஆண்டு கைத்தறி மற்றும் துணிநூல் தொழில் நுட்ப பட்டய படிப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவ/மாணவிகளிடமிருந்து மட்டும் வரவேற்கப்படுகின்றன.

**1. விண்ணப்பதாரரின் தகுதிகள்**

i) **கல்வித் தகுதி:** முதலாண்டு கைத்தறி மற்றும் துணிநூல் தொழில் நுட்ப பட்டய படிப்பில் சேருவதற்கு, விண்ணப்பதாரர் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு: 10ஆம் வகுப்பு தேர்ச்சிக்கு தர மதிப்பீடு வழங்கப்படும் மாநிலங்களைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் அவர்கள் பெற்ற மதிப்பெண் விவரம் இருப்பின் அதனை சமர்ப்பிக்க வேண்டும்.

(ii) **வயது வரம்பு:** பொதுப்பிரிவில் விண்ணப்பதாரரின் வயது 01.7.2021 அன்று 15 முதல் 23–க்குள் இருத்தல் வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினைச் சேர்ந்த விண்ணப்பதாரரின் வயது 15 முதல் 25–க்குள் இருத்தல் வேண்டும்.

(iii) **இட ஒதுக்கீடு:** தமிழக அரசின் இட ஒதுக்கீடு விதிகள் பின்பற்றப்படும். மேலும், மாநிலத்திற்கான மொத்த இட ஒதுக்கீட்டில் கைத்தறி நெசவாளர் சமூகத்தைச் சார்ந்தோர், பாரம்பரியமாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பத்தைச் சார்ந்தோர் அல்லது நெசவுத் தொழிலில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு குறைந்தபட்சம் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்படும். அதில் ஏதேனும் குறைவு ஏற்படின் அது, நெசவுத் தொழில் சாராத இதர விண்ணப்பதாரர்களால் ஈடு செய்யப்படும்.

(iv) **தேர்வு செய்யப்படவுள்ள இடங்கள்:** சேலத்திலுள்ள இந்திய கைத்தறி தொழில் நுட்ப பயிலகத்திற்கு 30 இடங்களுக்கும் இத்துடன் ஆந்திரப்பிரதேசத்திலுள்ள எஸ்.பி.கே.எம் இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகம், வெங்கடகிரிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 4 இடங்கள், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த கர்நாடகா கைத்தறி தொழில்நுட்ப பயிலகம், கடாக்கிற்கு 8 இடங்கள் மற்றும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த கண்ணூரிலுள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்திற்கு 5 இடங்களுக்கும் தமிழக தகுதிப் பட்டியலிலிருந்து மாணவ/மாணவியர் தேர்வு செய்யப்படுவார்கள்.

**2. கல்வி உதவித் தொகை :** இப்பட்டயப் படிப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு மாணவ/மாணவியருக்கும் படிப்புக் காலத்தில், முதலாண்டில் மாதம் ஒன்றுக்கு ரூ.1000/–ம், இரண்டாம் ஆண்டில் மாதம் ஒன்றிற்கு ரூ.1100/–ம், மூன்றாம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு ரூ.1200/–ம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும். மத்திய அரசின் 50% பங்களிப்பு பயிலகத்தால் வழங்கப்படுவதுடன், எஞ்சியுள்ள 50% கல்வி உதவித் தொகை முதலாம் ஆண்டு மாதமொன்றுக்கு ரூ.500/–, இரண்டாம் ஆண்டு ரூ.550/– மற்றும் மூன்றாம் ஆண்டு ரூ.600/– வீதம் தமிழக அரசின் பங்களிப்பாக வழங்கப்படும். (ஜூலை 16 முதல் மே 15 முடிய 10 மாதங்களுக்கு)

**3. விண்ணப்ப படிவங்கள்:** விண்ணப்ப படிவங்கள் "கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகம், குறளகம், 2ம் தளம், சென்னை –600 108" என்ற முகவரியில் அனைத்து வேலை நாட்களிலும் நேரிடையாகவோ அல்லது ரூ.5/– அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுயமுகவரியிட்ட அஞ்சல் உறை அனுப்பியோ **27.07.2021**–க்குள் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தினை தபாலில் பெறுவதற்கு அஞ்சல் வில்லை ஒட்டப்படாத கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப் படிவங்களை இணையதளம் மூலமாகவும் பதிவிறக்கம் செய்யலாம் **www.iihtsalem.edu.in.**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் மேற்கண்ட முகவரியில் கடைசி நாளான **27.07.2021** அன்று மாலை **5.45** மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

செ.ம.தொ.இ/502/வரைகலை/2021

**முதன்மை செயலர் / ஆணையர்**

Scanned by CamScanner